வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 3516 /ஆ4/ 2024, நாள்.25.02.2025
– – –

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மேல்நிலை பொதுத் தேர்வுகள் சார்பாக –மதிப்பிற்குரிய ஆசிரியர் தேர்வு வாரிய இணை இயக்குநர் அவர்களின் தலைமையிலான ஆயத்தக் கூட்டம் – தலைமையாசிரியர்கள், மற்றும் முதுகலை ஆசிரியர்கள்– கலந்து கொள்ள தெரிவித்தல் –சார்ந்து

=========

மேற்காணும் பொருள் சார்ந்து வேலூர் மாவட்டத்தில் மார்ச் –2025 மேல்நிலை பொதுத்தேர்வுகள் தொடர்பான ஆயத்தக் கூட்டம் மதிப்பிற்குரிய ஆசிரியர் தேர்வு வாரிய இணை இயக்குநர் அவர்களின் தலைமையில் கீழ்க்காணும் அட்டவணையின் படி நடைபெறவுள்ளது .

எனவே அனைத்து அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல மற்றும் தனியார் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து பாட முதுகலை ஆசிரியர்கள், தொழிற்கல்வி ஆசிரியர்கள், கணினி பயிற்றுநர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான பொதுத்தேர்வு தொடர்பான முன் ஆயத்தக்கூட்டம் வேலூர், லக்ஷ்மி கார்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கூட்ட அரங்கில் 26.02.2025 அன்று காலை 9.30 மணியளவிலும் முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலர்களுக்கான , ஆயத்தக் கூட்டம் பிற்பகல் 2.00 மணியளவில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (SSA) கூட்ட அரங்கிலும் நடைபெறுவதால் இக்கூட்டத்தில் சார்ந்த ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ள ஏதுவாக விடுவித்து அனுப்பிட அனைத்துப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**பிப்ரவரி –2025 அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் /முதுகலை ஆசிரியர்கள்ஆயத்தக் கூட்டம் நாள் 26.02.2025**

| வ. எண் | மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் முதுகலை ஆசிரியர்கள் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | அனைத்து அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல / மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள், தொழிற்கல்வி ஆசிரியர்கள், கணினி பயிற்றுநர்கள், உடற்கல்வி இயக்குநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், | காலை 9.30 மணி | **லக்ஷ்மி கார்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வேலூர்.** |
| 2. | அனைத்து தனியார் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து பாட முதுகலை ஆசிரியர்கள் | | |
| 3. | வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள், தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் | பிற்பகல் 2.00 மணி | **ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அலுவலக கூட்ட அரங்கம்(SSA) வேலூர்.** |

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர் ,
வேலூர் .

**பெறுநர்**
அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.